Marine Sciences Centre

*597 Q.—THIRU N. DENNIS: Will the Hon. the Minister for Education and Local Administration be pleased to state—

(a) whether there are proposals under the consideration of the Government to open a Marine Sciences Centre at Tamil Nadu; and

(b) if so, the details thereof?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: *(அ) & (இ) மாநிலத் திட்டக் குழுவின் பரிந்துரையின் பேரில் "கடல் பொறியியல் மற்றும் நாவாய் அறிவியல் பயிற்சி தொடங்குவதற்கான திட்டம்" ஒன்று தயாரிக்கப்பட்டு ஐந்தாம் ஐந்தாண்டுத் திட்டத்தின் நாடும் முன் வரைவுத் தாளில் சேர்க்க மத்திய அரசுக்கு அனுப்பப்பட்டுள்ளது, ஐந்து ஆண்டுகளுக்குமாக இத்திட்டத்திற்கான மொத்த தொடராச் செலவினம் ரூ. 18 லட்சம், தொடர் செலவினம் ரூ. 25 லட்சம். மைய அரசினர் அனுமதி வழங்குவதைப் பொறுத்து இப்பயிற்சி துவக்கப் பெறும்.*

THIRU N. DENNIS: Sir, may I know the time when it is likely to be opened?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: *தலைவரவர்களே, இது ஐந்தாவது ஐந்தாண்டுத் திட்டக்காலத்தில் துவக்கப்பட வேண்டுமென்பது கோரிக்கை. மத்திய அரசாங்கத்துக்கு அனுப்பப் பட்டிருக்கிறது. ஐந்தாவது ஐந்தாண்டுத் திட்டக்காலத்தில் துவக்கப்பட வேண்டுமென்ற இந்தக் கோரிக்கையை மத்திய அரசு ஏற்றுக்கொள்ளுமானல், ஐந்தாவது ஐந்தாண்டுத் திட்டம் துவங்கப்படும்போதே, இதையும் துவங்குவதற்கு வசதிகள் ஏற்படும்.*

திரு. கே. எ. வகாப்: *தலைவரவர்களே, கடல் சார்ந்த அறிவியல் நிலையம் ஏற்படுத்துவதை, புகழ்பெற்ற பூம்புகாரில் பண்டைக் காலத்தில் துறைமுகங்கள் இருந்திருக்கின்றன. அங்கு அமைப்பதற்கு அரசாங்கம் செயற்குறிப்பு வைத்திருக்கிறதா என்று அறிய விரும்புகிறேன்.*

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: Centre of Ocean Engineering and Marine Sciences *என்ற அந்தக் கல்வி சொல்லிக்கொடுப்பதற்கு என்ன என்ன சூழ்நிலைகள்*

1973 ஏப்ரல் 2]

என்பதைப் பார்க்கவேண்டும். பண்டைய வரலாற்றுச் சிறப்புகள் கொண்ட பெருமைபெற்ற துறைமுகம் என்பதால், அங்கு கொண்டுபோய் வைத்துவிட முடியாது. ஏனென்றால், இது மேல் பட்டப்படிப்புக்காகவும், அறிவுக்காகவும் பயன்படுகின்ற ஒன்று. எந்த இடத்திலே இடம் பெற்றால், அதனுடைய நோக்கங்கள் நிறைவேறும் என்பதைப்பற்றி வல்லுநர்கள் கருத்தைக் கண்டறிந்து, அதன்பிறகு இதுபற்றி அரசு முடிவு செய்யும்.

திரு. கோ. இளங்கோவன் : மரைன் எம்.எஸ்ஸி. படித்தவர்கள் வேலை இல்லாமல் இருக்கிறார்கள். இந்த அறிவியல் நிலையம் துவக்கப்பட்டால், அவர்களுக்கு வேலை வாய்ப்பு கிடைக்குமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : தலைவர் அவர்களே, முதலில் பிள்ளை பிறக்கவேண்டும். பிறகுதான் மற்றவைகளைக் கவனிக்க வேண்டியவர்களாக இருக்கிறோம். ஏனென்றால், மத்திய அரசாங்கத்தினிடத்தில் செயற்குறிப்பு இருக்கிறது. அதை ஏற்றுக்கொண்ட பிறகு, எப்படிப்பட்டவர்களை எடுத்துக்கொள்வது, எப்படிப்பட்டவர்களைக்கொண்டு ஆராய்ச்சி செய்வது, எப்படிப்பட்டவர்களை மாணவர்களாகச் சேர்ப்பது, என்பதுபற்றியெல்லாம் முடிவு செய்யவேண்டியிருக்கும்.

திரு. ஏ. எம். இராஜா : தலைவர் அவர்களே, இப்படிப்பட்ட இந்த மரைன் சையன்ஸ் சென்டர் துவங்கும்போது, இப்பொழுது அண்ணாமலைப் பல்கலைக் கழகத்திலே இருக்கிற ஒரு பிரிவான 'மரைன் பாத்தலாஜி' வகுப்பை இத்தோடு இணைப்பதற்கான திட்டம் இருக்கிறதா? இந்த 'மரைன் சையன்ஸ் சென்டர்' உருவாகும்போது, இதை ஏற்பட இருக்கும் டெக்னிக்கல் யூனிவர்சிட்டியின்கீழ் இணைத்து, இயங்குவதற்கான நடவடிக்கை எடுக்கப்படுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : தலைவர் அவர்களே, அண்ணாமலைப் பல்கலைக் கழகத்திலே இருக்கிற துறை இத்தோடு இணைக்கப்பட மாட்டாது. தொழில் நுட்பத் துறையோடு தான் இது இணைக்கப்பட இருக்கிறது. மேல்பட்ட படிப்பு என்ற வகையிலே மட்டும் அல்லாமல் Ocean Engineering and Marine Sciences என்ற தனிப் பிரிவின்கீழ் இது அமையும்.

[1973 ஏப்ரல் 2

திரு. ஆ. பரந்தாமன் : தலைவர் அவர்களே, கடல் விஞ்ஞானத்தைப்பற்றி மேலைநாடுகளில் எல்லாம் நல்ல ஆராய்ச்சிகள் செய்து வெற்றிகண்டு அவர்கள் பணத்தைக் குவித்திருக்கிறார்கள். ஆகவே இதன் அவசியத்தை உணர்ந்து மத்திய அரசிடம் வற்புறுத்தி அனுமதி தந்து, நிதி ஒதுக்கீட்டை விரைவிலே தரவேண்டுமென்று மத்திய அரசை நம்முடைய அரசு கேட்டுக்கொள்ளுமா ?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : அந்த வகையிலே தான் அதற்கான செயற்குறிப்புகள் மற்றவை எல்லாம் தயாரிக்கப் பட்டு மத்திய அரசுக்கு அனுப்பப்பட்டு இருக்கின்றன. மத்திய அரசின் அறிக்கையை விரைவிலே எதிர்பார்த்துக்கொண்டு இருக்கிறோம்.

திரு. நா. வீராசாமி : தலைவர் அவர்களே, நீண்ட நெடிய கடற்கரை நம்முடைய நாட்டிலேயே தமிழகத்திலேதான் இருக்கிறது. இப்படிப்பட்ட கடற்கரை வட மாநிலங்களிலே இருந்திருந்தால், இந்நேரம் அவர்கள் இந்த மெரைன் சயின்ஸ் கொண்டுவந்து துவங்கியிருப்பார்கள். நம்முடைய மாநிலத்திலே இருப்பதால், மத்திய அரசு ஐந்தாண்டுத் திட்டம் என்று எல்லாம் சொல்லிக்கொண்டிருக்காமல் உடனடியாகத் துவங்குவதற்கு மத்திய அரசாங்கத்திடம் நம்முடைய அரசு வற்புறுத்துமா ?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : தலைவர் அவர்களே, தமிழகத்திலே 640 மைல் நீளமுள்ள கடற்கரை இருக்கிறது. அதையெண்ணித்தான் கடல் பொறியியல் மற்றும் நாவாய் அறிவியல் பயிற்சி நிலையம் தொடங்கவேண்டுமென்று சொல்லப்பட்டிருக்கிறது. அது மத்திய அரசாங்கத்தின் பரிசீலனையில் இருக்கிறது. மத்திய அரசாங்கமும், திட்டக் குழுவும் அனுமதியளித்தால், அதைத் துவங்குவதற்கான எல்லா நடவடிக்கைகளும் எடுக்கலாம்.

தொழில் வரி

*598 வினா—**திரு. கி. செயராமன் :** மாண்புமிகு கல்வி-உள்ளாட்சித்துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) நகரமன்றங்கள் தொழில் வரி விதிப்பினின்று மாதம் ரூ. 300 வரைக்கும் வருமானம் உள்ளவர்களுக்கு விலக்கு அளிக்கும் செயற்குறிப்பு ஏதேனும் உண்டா ?